# தமிழ் இலக்கியங்களில் சில புதிய பார்வைகள்

முனைவர்
**இரா. செல்வக்கணபதி**

## வள்ளுவத்தில் போர்க்களங்கள்



www.saivamonline.com

# Contact Details

www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline  Saivam Online



sspathipagam@gmail.com

G Pay +91 94440 21113

+91 94440 21113

UPI 9444021113@UPI

# 6. வள்ளுவத்தில் போர்க் களங்கள்

"புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடும் சாய்ப்போம்"

என்று அறைகூவல் விடுத்தார் பாவேந்தர் பாரதிதாசன். "ஊர் வகுத்தல் கோயில் அரசு குடி வகுப்பு" என்று மனித சமுதாயம் படிப்படியாக ஒரு பக்கம் வளர்ச்சி அடைந்து வந்தபோதே, இன்னொரு பக்கம் ஆட்சியாளர்கள், அதிகார வேட்கையில், போர்களை முன்னிறுத்தி, சமூக அமைதியைக் கெடுத்தனர்.

*"ஊர் வகுத்தல் கோயில் அரசு குடி வகுப்பு" என்று மனித சமுதாயம் படிப்படியாக ஒரு பக்கம் வளர்ச்சி அடைந்து வந்தபோதே, இன்னொரு பக்கம் ஆட்சியாளர்கள், அதிகார வேட்கையில், போர்களை முன்னிறுத்தி, சமூக அமைதியைக் கெடுத்தனர்.*

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்றுஇவ் வுலகத்து இயற்கை"

என்று கொலையும், பொருள் அழிவும் கொண்ட போர்நெறியை, உலக இயற்கை என்று பதிவு செய்தார் புறநானூற்றுப் புலவர், இடைக்குன்றூர்க் கிழார்.



www.saivamonline.com

## பொற்காலமா? போர்க்காலமா?

சங்க காலத்தைத் தமிழர்களின் பொற்காலம் என்று புகழ்ந்துரைப்பார் பலர் உளர். இது, ஆராயப்பட வேண்டுவது. ஆனால், ஒன்று உறுதி. அது பொற்காலமோ அல்லவோ, அது ஒரு போர்க்காலம் என்பதில் ஐயம் இல்லை. புறவாழ்வில், ஆராயப்பட வேண்டுவன பலநூறு இருக்கவும், போரையே புறவாழ்வாகச் சித்திரித்தனர் நம் முன்னோர். மொழிவழி ஒன்றுபடாது, இனவழி வேறுபட்டு நின்று, "வடவேங்கடம் தென்குமரியிடையே" நம்மவர்கள் நிகழ்த்திய இடையறாத போராட்டங்களே, பண்டைத் தமிழர் வீரமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

---

*சங்க காலத்தைத் தமிழர்களின் பொற்காலம் என்று புகழ்ந்துரைப்பார் பலர் உளர். இது, ஆராயப்பட வேண்டுவது. ஆனால், ஒன்று உறுதி. அது பொற்காலமோ அல்லவோ, அது ஒரு போர்க்காலம் என்பதில் ஐயம் இல்லை.*

*பல பெண்களோடு உறவு கொள்ளும் ஆண்களைப் "பரத்தன்" என்று, புது சொற் படைத்து இகழ்ந்துரைக்கிறார். பரத்தமை பற்றி வரும், மருதத் திணை ஊடலைப் புறந்தள்ளி, அளப்பரிய அன்பின் முதிர்ச்சியில், ஊடல் விளைவதாகப் புதுமை செய்கிறார்.*

---

## எழுவகைப் போர்கள்

சங்கப் புறநூல்களும், இவற்றிற்கு மேல் வரிச் சட்டமாகக் கருதப்படும் தொல் காப்பியப் புறத்திணை இயலும், போர் முறைகளைப் பலவாக விரித்துரைக்கின்றன. மாற்றரசன், பசுக்களைக் கவர்வது "வெட்சி" என்றும், அவற்றை மீட்கும் முயற்சி "கரந்தை" என்றும் பேசப்பட்டன. மாற்றான், மண்கொள்ளச் சினந்தெழுவது "வஞ்சி" என்றும், அவன் மண்காக்க எதிரூன்றி நிற்பது "காஞ்சி" என்றும் அடையாளம் காட்டப்பட்டன. பகைவனது அரண் சூழ்ந்து போரிடுவது "உழிஞை" எனப்பட்டது. உள்ளிருப்பவன், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப் போராடுவது "நொச்சி" எனக் கூறப்பட்டது. யார் தம்முள் வலியர் என, இரு பெருவேந்தர் ஒரு களத்துப் பொருவது "தும்பை" எனப் போற்றப்பெற்றது.



www.saivamonline.com

போர்குறித்த எழுதிணைகளுக்கும், துறைகள் வகுக்கப்பட்டன. பன்னூறு புலவர்கள், இத்திணை, துறைகளைப் பற்றி நின்று பாடினர். அல்லது, அவர்கள் பாடிய பாடல்கள், இத்திணை துறைகளுக்குள் கொண்டுவந்து அடக்கப்பட்டன.

## வள்ளுவரின் எதிர்நீச்சல்

சங்ககாலச் சமூக வாழ்க்கையைத் திருவள்ளுவர் ஏற்றுப் போற்றியவர் அல்லர். எதிர்நீச்சல் இலக்கியம் படைத்தவர்.

கள்ளுண்ணுதல், சமூகப் பெருமிதமாகச் சங்கப் புலவர்களால் போற்றப் பெற்றது. "உண்ணற்க கள்ளை" எனச் சமகாலத்திலேயே வள்ளுவர், எதிர்ப்பைப் பதிவு செய்தார். புலால் உண்ணும் சங்க இலக்கியப் பெருமிதத்தை, வள்ளுவர் நிராகரித்து விடுகிறார்.

*நாடாளும் வேந்தன், போர் இல்லாத ஒரு சமூகத்தின் தலைவனாகத் திகழ வேண்டும் என்பதே அவர் விருப்பமாக அமைகிறது. "எந்த ஒரு மன்னனின் ஆற்றலும், புகழும், அவன் போர்க்கள வெற்றியால் தீர்மானிக்கப்படுகின்றன" என்ற சங்ககாலக் கோட்பாடு வள்ளுவருக்கு உடன்பாடாக இருக்கவில்லை.*

அக இலக்கியம் பெருமிதமாகப் பேசும் பரத்தை மகளிரைத் திருவள்ளுவர் இகழ்ந்து ஒதுக்குகிறார். பல பெண்களோடு உறவு கொள்ளும் ஆண்களைப் "பரத்தன்" என்று, புது சொற் படைத்து இகழ்ந்துரைக்கிறார். பரத்தமை பற்றி வரும், மருதத் திணை ஊடலைப் புறந்தள்ளி, அளப்பரிய அன்பின் முதிர்ச்சியில், ஊடல் விளைவதாகப் புதுமை செய்கிறார்.

## போர் இல்லாத சமூகம்

போர்முறை பற்றியும், வள்ளுவர் சங்க நூல்களோடு ஒத்துப் போக விரும்பவில்லை என்பதைப் பல இடங்களில் இனங்காட்டுகிறார். தொல்காப்பியமும், புற இலக்கியங்களும் பேசிக் காட்டும் எழுவகைப் போர் முறைகளில், யாதொன்றையும் வள்ளுவர், தம் நூலுள் பதிவு செய்திலர். காரணம், நாடாளும் வேந்தன், போர் இல்லாத ஒரு சமூகத்தின் தலைவனாகத் திகழ வேண்டும் என்பதே அவர் விருப்பமாக அமைகிறது. "எந்த ஒரு மன்னனின் ஆற்றலும், புகழும், அவன் போர்க்கள வெற்றியால் தீர்மானிக்கப்படுகின்றன" என்ற சங்ககாலக் கோட்பாடு வள்ளுவருக்கு உடன்பாடாக இருக்கவில்லை.



www.saivamonline.com

## இன்பத்துள் இன்பம்

தனிமனித வாழ்க்கையில், ஒருவன் பெறும் இன்பத்திற்கு மூலம், "அன்பே" என்று கண்டு தெளிந்தவர் திருவள்ளுவர். அதுபோல், நாடாளுவோன் எய்தும் இன்பங்கள் பலவற்றுள்ளும் சிறந்த இன்பம்? அவனுக்கு எதன் மூலம் கிடைத்தல் கூடும் என்று வள்ளுவர் ஆராய்கிறார்.

***நாடாளுவோனின் புல்லறிவும், அதுபற்றி வரும் வெகுளியும், அதனால் வரும் இகலுமே, போர்களுக்குக் காரணங்கள் என்று கண்டு காட்டுகிறார். துன்பங்கள் பலவற்றுள்ளும், கொடிய துன்ப முதல்*"இகல்" *என்பது அவர் கண்டு தெளிந்தது***

"இகல் என்னும் எவ்வநோய்" நீக்குதலே வழி எனக் கண்டு காட்டுகின்றார். ஒருவர் தம்முட் பொருது வலிதொலைவதற்கு ஏதுவாய மாறுபாடு என்று, இகலுக்குச் சொற்பொருள் விரிக்கிறார் பரிமேலழகர். நாடாளுவோனின் புல்லறிவும், அதுபற்றி வரும் வெகுளியும், அதனால் வரும் இகலுமே, போர்களுக்குக் காரணங்கள் என்று கண்டு காட்டுகிறார். துன்பங்கள் பலவற்றுள்ளும், கொடிய துன்ப முதல் "இகல்" என்பது அவர் கண்டு தெளிந்தது.

*"இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்*
*துன்பத்துள் துன்பங் கெடின்"*

## இகல் இல்லா உலகம்

நாடாளும் மன்னன், "இகல்" தீது என்று தெளிந்திருந்தாலும், பகைவன், அவன் தன்னோடு கூடாமை கருதி வெறுப்பூட்டினால், என் செய்வது என்ற வினா எழுகிறது. தாம் விட்டுக் கொடுத்தாவது "இகல்" தோன்றாது, வளைந்து போதல், தலையாயது என அறிவுறுத்துகிறார் வள்ளுவர்.

*"பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி*
*இன்னாசெய் யாமை தலை"*

இகல், உள்ளத்தில் எழும்போதெல்லாம், அதனை வளரவிடாது ஓம்புதல் ஒருவனுக்கு ஆக்கம் தருவதாகும். அவ்வாறன்றி, இகலுக்கு ஏற்றம் தந்து, கொண்டு செலுத்துவானாயின் "கேடு" அவனை வந்து சூழும் என்று எச்சரிக்கிறார்.

*"இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை*
*மிகலூக்கின் ஊக்குமாங் கேடு"*



www.saivamonline.com

எவ்வகையிலும், நாடாள்வோன், இகலுக்கு இடங்கொடாது ஒழிந்தால், போரற்ற வாழ்வை, அது தரும் என்பதிலே, வள்ளுவர் உறுதியாக நிற்கிறார்.

## ஆறு அங்கங்கள்

இவ்வாறெல்லாம் கூறுவதால் மன்னன், போருக்கு அஞ்சிய கோழையாக வாழ்தல் வேண்டும் என்று வள்ளுவர் கூறுவதாக எண்ணிவிடக்கூடாது.

***அங்கங்களுள், ஒன்று குறைந்தாலும், ஓர் உடல், உறுப்புக் குறைபாடு உடையதாகக் கருதப்படுவதுபோல், படை முதலிய உறுப்புகளுள் யாதொன்று குறைந்தாலும், மன்னன் அங்கக் குறையுடையவனாவன் என்பது வள்ளுவர் கருத்து.***

"இறைமாட்சி" தொடங்கும்போதே, மன்னனின் ஆறங்கங்களுள், முதன்மையானது "படையே" என்று பதிவு செய்ய அவர் தவறவில்லை. இதனை மன்னனின் உறுப்பு என்ற பொருளில் "அங்கம்" என்று குறிக்கிறார். அங்கங்களுள், ஒன்று குறைந்தாலும், ஓர் உடல், உறுப்புக் குறைபாடு உடையதாகக் கருதப்படுவதுபோல், படை முதலிய உறுப்புக்களுள் யாதொன்று குறைந்தாலும், மன்னன் அங்கக் குறையுடையவனாவன் என்பது வள்ளுவர் கருத்து.

## இருவகைப் போர் முறைகள்

வள்ளுவர் வகுத்துரைக்கும் போர்முறை, இரண்டு கூறுகளுடையனவாக அமைகின்றன. ஒன்று தற்காப்பு; மற்றது பகை மேற் சேர்தல் என்பன அவை.

நாடு என்ற அதிகாரத்தில், வள்ளுவர் இதற்குத் தோற்றுவாய் செய்கிறார். எது உன்னதமான நாடு? என்ற வினாவை முன்னிறுத்தி, விடை கூறும் திருவள்ளுவர், ஓரிடத்தில், "செறுபகையும் சேராதியல்வது நாடு" என விளக்கம் தருகிறார். நாடாள்வோன் தன் ஆற்றல்; தான் போற்றி வைத்திருக்கும் நிலைப்படை, நாட்டைப் பாதுகாக்க உருவாக்கி வைத்திருக்கும் இயற்கை மற்றும் செயற்கை அரண்கள் ஆகியவற்றின் வலிமையால், புறத்து நின்று வந்து அழிவு செய்யும் பகையின்றி, நாட்டைப் பாதுகாத்தல் வேண்டும் என்று அறிவுரை வழங்குகிறார்.



www.saivamonline.com

## தன் நாடு காத்தல்

பகைவென்று மேம்படுதலை விட தன் நாட்டு மக்களுக்குக் காவல் செய்து அளிப்பது, மன்னன் கடமை என்பதை, "அரண்" என்ற அதிகாரத்தால் நிறுவிக்காட்டுகின்றார். பலவாறு, ஓர் அரண் அமையவேண்டும் திறம் விரிக்கும் வள்ளுவர்

*"சிறுகாப்பிற் பேரிடத்த தாகி உறுபகை*
*ஊக்கம் அழிப்ப தரண்"*

என்கிறார். அரணில், படைவீரர்களால் காக்க வேண்டிய இடம், சிறிதாக இருத்தல் வேண்டும். அரண் உள் வாழ்வார்க்கு, யாவும் அமையும் பேரிடத்ததாகவும் அமைதல் வேண்டும். இங்ஙனமிருந்தால், அரண்கொள்ள வரும் பகைவனின் மனவெழுச்சியை அழித்தல் கூடும் என்பது அவர் கருத்து.

## பகைவரைப் பாத்திப் படுப்பது

பகையற்ற திறமும், பாதுகாவல் மிக்க அரணும் உடையான் மீது, பகை எழுதல் இயலாது என்பதை, உறுதிசெய்த வள்ளுவர், தவிர்க்க இயலாத சூழல்களில், பகைவன் மேல் படைகொண்டு செல்ல நேர்ந்தால், மன்னன் முன்னதாக மேற்கொள்ளவேண்டிய பாதுகாவல்களையும் விரிவாக எடுத்துரைக்கிறார்.

மன்னன் மேற்கொள்ளும் செயல் யாதாயினும், அதனை, அவன், பலகாலும் ஆராய்ந்தே தொடங்க வேண்டும் என்பதற்காகத் "தெரிந்து செயல்வகை" வகுத்துரைக்கும் வள்ளுவர், படை நடத்த முனையும் மன்னனுக்கு ஓர் எச்சரிக்கை தருகிறார்.

படை நடத்திச் சென்றால், நிகழும் திறங்களை எல்லாம், முற்ற எண்ணாது, சில எண்ணிய துணையானே அரசன் பகைவர் மேற் செல்லுதல், பகைவரை, அவர் வளரும் நிலத்திலேயே, மேலும் வலிதாக நிலைபெறச் செய்யும் அறியாமையாக முடியும் என்று வள்ளுவர் எச்சரிக்கிறார்.

*"வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்*
*பாத்திப் படுப்பதோ ராறு"*

வலி, காலம், இடன் என்றிவற்றால், தனக்கும் பகைவர்க்கும் உளவாம் நிலைமைகளும், வினை தொடங்குமாறும், அதற்கு வரும்



www.saivamonline.com

இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், வெல்லுமாறும், அதனாற் பெறும்பயனும், முன்னதாகவே முற்ற எண்ணப்பட வேண்டும் என்று "வகையறச் சூழ்தல்" என்பதனுக்கு நுட்பவுரை வகுக்கிறார் பரிமேலழகர்.

## அறிய வேண்டுவன மூன்று

இதனை மேலும் விரித்துரைத்து, படை நடத்த முயலும் மன்னனுக்குப் போர்நெறி பற்றி, அறிவுரை வழங்க வரும் வள்ளுவர், வலியறிதல், காலமறிதல், இடன் அறிதல் என மூன்று அதிகாரம் அமைத்து, அவன் சிந்தனையைத் தூண்டுகின்றார். இவ்வதிகாரங்களும், அவற்றில் இடம் பெறும் குறட்பாக்களும், அவற்றை விளக்க வள்ளுவர் ஆளும் அரிய உவமைகளும், மிக மிக உயர்வானவை. மன்னனுக்கு மட்டுமின்றி, இவை, வினை தொடங்க எண்ணும் ஒவ்வொருவருக்கும் வள்ளுவர் தரும் கைவிளக்குகளாகத் திகழ்கின்றன.

---

***படை நடத்த முயலும் மன்னனுக்குப் போர்நெறி பற்றி, அறிவுரை வழங்க வரும் வள்ளுவர், வலியறிதல், காலமறிதல், இடன் அறிதல் என மூன்று அதிகாரம் அமைத்து, அவன் சிந்தனையைத் தூண்டுகின்றார். இவ்வதிகாரங்களும், அவற்றில் இடம் பெறும் குறட்பாக்களும், அவற்றை விளக்க வள்ளுவர் ஆளும் அரிய உவமைகளும், மிக மிக உயர்வானவை.***

---

## வலியறிதல்

வலியறிதலில் தான் செய்யக் கருதிய வினை வலி, அதனைச் செய்து முடிக்கும் தன்வலி, அதனை விலக்கலுறும் மாற்றான் வலி, இருவருக்கும் துணையாவார் வலி என்பன நான்கும், மன்னனால் நன்கு அளந்தறியப்பட வேண்டும் என்று எச்சரிக்கிறார். "பீலிபெய் சாகாடும் அச்சிறும்", "நுனிக் கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின் உயிர்க்கு இறுதியாகி விடும்" முதலிய அரிய, பிறிதுமொழிதல் அணிகளால், வலியறிதலை, இன்றியமையாதது என்று நெஞ்சில் பதிய வைக்கிறார்.

## காலம் அறிதல்

"பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்" என்றும், "கொக்கொக்கக் கூம்பும் பருவத்து" என்றும் உவமைகளால், மன்னனுக்குக் காலம் அறிந்து செயற்படக் கட்டளை பிறப்பிக்கிறார்.



www.saivamonline.com

## இடம் அறிதல்

இவற்றைப் போல், "தண்ணீரில், பலம் மிக்க முதலை, கரைக்கு வந்தால், அதனினும் வலிமை குறைந்தன அதனை வென்றுவிடும்" என்றும், "மண்ணில் விரைந்தோடும் தேர் நீரில் ஓடாது; நீரில் விரைந்து செல்லும் ஓடம், நிலத்தில் ஓடாது" என்றும் உலகியல் உண்மைகளால், இடனறிதலின் இன்றியமையாமையை விளக்குகிறார் வள்ளுவர்.

## வள்ளுவர் உள்ளம்

இம்மூவகை எச்சரிக்கைகளால், வள்ளுவர் கூறவந்தன இவைதாம். வலியறிதல் முதலிய மூன்றையும் ஆராயாவிட்டால், மன்னன் தோற்பான் என்பதைவிட, அவனது அறிவீனத்தால், பல்லாயிரம் உயிர்கள் மடிந்துவிடுமே என்ற அச்சத்தால் வந்த பரிவுணர்வே, வள்ளுவரிடம் மேலோங்கி நிற்கக் காண்கிறோம்.

---

***வலியறிதல் முதலிய மூன்றையும் ஆராயாவிட்டால், மன்னன் தோற்பான் என்பதைவிட, அவனது அறிவீனத்தால், பல்லாயிரம் உயிர்கள் மடிந்துவிடுமே என்ற அச்சத்தால் வந்த பரிவுணர்வே, வள்ளுவரிடம் மேலோங்கி நிற்கக் காண்கிறோம்.***

---

## நல்லெண்ண வெளிப்பாடு

வள்ளுவரின் மேற்குறித்த நல்லெண்ணத்தின் விளைவாகவே, அரசனை மேலும் எச்சரித்து விழிப்பூட்ட "பகை மாட்சியும்", "பகைத்திறம் தெரிதலும்" வகுத்தளிக்கப்பட்டுள்ளன. தன் அறிவின்மையால் படை நடத்தி, தோல்விகண்டு, பகைவனை உயர்வடையச் செய்துவிடும் அறியாமையை, மன்னன் களைந்திட வேண்டுமென்பதைப் பகை மாட்சியில் பேசுகறார்.

"பகைத் திறந் தெரிதல்", என்பதனை உரைகாரர் பரிமேலழகர் "மாணாத பகையை ஆக்குதல் குற்றமும், முன் ஆகி நின்ற பகையுள் நட்பாக்கற்பாலதும், நொதுமலாக்கற்பாலதும், அவற்றின்கண் செய்வதும், ஏனைக்களைதற்பாலதன் கண் செய்வனவும், களையும் பருவமும், களையாக்கால் படும் இழுக்கும் என்று இத்திறங்களை ஆராய்தல்" என்று விரித்துரைத்து அதிகாரத்திற்கு விளக்கம் தருகிறார்.

"பகை என்னும் பண்பிலது" என்றும், "பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன்" என்றும், "இளைதாக முள்மரம்



www.saivamonline.com

கொல்க” என்றும் வரும் இவ்வதிகாரத் தொடர்கள், வள்ளுவரின், போர்வேண்டாப் பண்புக்குக் கட்டியம் கூறி நிற்கின்றன.

## படைமாட்சி

போர் வேண்டாம் என்பது தம் கருத்தாயினும், போர், தவிர்க்க இயலாதது என்பதை நன்கு உணர்ந்திருந்த வள்ளுவர், போர்க்களத்தில் பின்பற்றப்படவேண்டிய, உயர் பண்புகளைப் பதிவு செய்யத் தவறவில்லை. இதன் வெளிப்பாடே “படைமாட்சி”, “படைச் செருக்கு” என்னும் இரண்டு அதிகாரங்கள்.

***போர் வேண்டாம் என்பது தம் கருத்தாயினும், போர், தவிர்க்க இயலாதது என்பதை நன்கு உணர்ந்திருந்த வள்ளுவர், போர்க்களத்தில் பின்பற்றப்படவேண்டிய, உயர் பண்புகளைப் பதிவு செய்யத் தவறவில்லை.***

படைமாட்சி என்பது படையினது நன்மை கூறுவது. படையே மன்னனது செல்வங்கள் பலவற்றுள் தலையாய செல்வம் என்று தொடங்கி, படையுள்ளும், மூலப்படையே சிறந்தது என்றும், அதனுள்ளும், வீரனே சிறந்தான் என்றும், முதற்கண் பேசி, படையினது இலக்கணம் கூறி, இத்தகு படை, தகையின்மை, அரசன் கொடைத் தாழ்வு, தக்க தலைமை இன்மை முதலியவற்றால், எவ்வாறெல்லாம் தாழ்வுறும் என்பதனை எடுத்துரைத்து வள்ளுவர் படைமாட்சியை நிறைவு செய்கிறார்.

## படைச் செருக்கு

படைவீரர்களது வீரமிகுதியைப் “படைச் செருக்கு” அதிகாரம் விரித்துரைக்கிறது. பெரிய இலக்குடையவனாக வீரன் திகழ வேண்டும் என்பதனைக் “கானமுயல் எய்த” என்ற குறளால், வள்ளுவர் நிலை நாட்டுவார். போர்க்களத்தில், அறிவை மீதூர்ந்த உணர்வும், போர்வெறியும் தலைப்படும்போது, சிறக்கும் வீரர் மாண்பினை, அதிகாரம் பலபட எடுத்துரைக்கிறது.

## பேராண்மை எது?

“பேராண்மை” என்ற சொல்லை, வள்ளுவர் ஈரிடங்களில் வெவ்வேறு பொருள்களில் ஆள்வார். “பிறன்மனை நோக்காத பேராண்மை” என்பது ஓரிடம். படைச் செருக்கில், மீண்டும் அதனைப் புதிய பொருளில் முன்னிறுத்துவார். பகைமேற் சென்று, இரக்கமுற்று,



www.saivamonline.com

அன்பு செய்யும் உபகாரமே, "பேராண்மை" என்ற வேலாயுதத்தின் கூர்மையான பகுதி என்கிறார் வள்ளுவர்.

*"பேராண்மை என்ப தறுகணொன் றுற்றக்கால்*
*ஊராண்மை மற்றதன் எஃகு"*

## இன்றைய போர் முறைகள்

இன்றைய போர் முறைகள், வள்ளுவரால் கற்பனை செய்துகூட பார்த்திருக்க இயலாதன. ஆயுதம் கொண்ட கூட்டம், நிராயுதபாணிகள் மீது தாக்குதல் செய்தலும், பலர் கூடிச் சிலரை வளைத்தலும், எதிரியிடம் இல்லாத, வலிய கருவியால் எதிரியை வீழ்த்துவதும், பேரழிவு ஆயுதங்களால் மனித குலத்தைக் கொன்று குவிப்பதும், மறைந்து நின்று தாக்குதலும், வள்ளுவர் அறிந்திருக்க மாட்டார்.

***இன்றைய போர் முறைகள், வள்ளுவரால் கற்பனை செய்துகூடப் பார்த்திருக்க இயலாதன. ஆயுதம் கொண்ட கூட்டம், நிராயுதபாணிகள் மீது தாக்குதல் செய்தலும், பலர் கூடிச் சிலரை வளைத்தலும், எதிரியிடம் இல்லாத, வலிய கருவியால் எதிரியை வீழ்த்துவதும், பேரழிவு ஆயுதங்களால் மனித குலத்தைக் கொன்று குவிப்பதும், மறைந்து நின்று தாக்குதலும், வள்ளுவர் அறிந்திருக்க மாட்டார்.***

## வள்ளுவர் கோபம்

அறிவைப் பெரிதென்று பேசும் இயல்பினர் வள்ளுவர். "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று சிறப்பிக்கும் வள்ளுவர், அவ்வறிவு அழிவுக்குப் பயன்படும்போது, நெஞ்சம் உருகி, சினம் கொண்டு, "அறிவினான் ஆகுவது உண்டோ" என்று அறிவை இழித்துரைக்கிறார். ஏன் எனில்,

"பிறிதின் நோய் தன்நோய் போல் போற்றாக்கடை" என்று காரண விளக்கம் தருகிறார். "சாதலின் இன்னாதது இல்லை " என்று இரங்கும் வள்ளுவர், எக்காரணம் கொண்டும், உயிர்க் குலம் மடிதலை விரும்பியிருக்கவில்லை.

## வள்ளுவர் விருப்பங்கள்

இகல் நீக்கி, மனித குலம் அன்பில் தழைக்க வேண்டும் என்பதும்,



www.saivamonline.com

பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதும் அறிவு மலர வேண்டும் என்பதும், போர்முனையிலும் தன்னால் வீழ்த்தப்பட்டவன் உயிருக்குப் போராடும்போது, வீழ்த்தியவனே அவனுக்கு அன்பு செய்தல் வேண்டும் என்பதும், வள்ளுவரின் ஒப்புயர்வற்ற விருப்பங்கள்.

***இகல் நீக்கி, மனித குலம் அன்பில் தழைக்க வேண்டும் என்பதும், பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதும் அறிவு மலர வேண்டும் என்பதும், போர்முனையிலும் தன்னால் வீழ்த்தப்பட்டவன் உயிருக்குப் போராடும்போது, வீழ்த்தியவனே அவனுக்கு அன்பு செய்தல் வேண்டும் என்பதும், வள்ளுவரின் ஒப்புயர்வற்ற விருப்பங்கள்.***

## வேரொடும் சாய்ப்போம்

போர் மேகங்கள் சூழ்ந்த, இத்தகு காலகட்டங்களில், வள்ளுவத்தை நாமும் கற்போம்: போர்வெறி கொண்டார்க்கு மெல்லக் கற்பிப்போம்: "கெட்ட போரிடும் உலகத்தை வேரொடும் சாய்ப்போம்".



www.saivamonline.com